1992 மார்ச் 24]

332—

புதுக்கோட்டையில் விற்பனை மையம்

*4632— திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அண்ணா பண்ணையில் கண்டுபிடிக்கப்படும் உயர் விளைச்சல் ரகங்களான விதை, படிக்கன்றுகள், நெல், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள்— போன்றவற்றை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து வருகின்ற விவசாயிகள் வாங்கிச் செல்ல ஏதுவாக புதுக் கோட்டை நகரத்திலேயே ஒரு விற்பனை மையம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை நகரத்தில் சுற்றுவட்டாரப்பகுதி மக்களின் தேவைக்காக வேளாண்மை விரிவாக்க மையம் ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வருகின்றது. மேலும் விற்பனை மையம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை குடுமியான்மலையில் பல்வேறு உயர் ரக விதைகள், படிக்கன்றுகள் மற்றும் பலா, வாழை, தென்னை போன்ற உயர்ரகக் கன்றுகளைத் தயார் செய்து அதை அறிந்து விவசாயிகள் வாங்குவதற்காகக் குடுமியான்மலைக்குச் செல்கிற போது அங்கே வாங்குகின்ற சூழ்நிலை இல்லை என்று அந்த மாவட்ட விவசாயிகள் பரவலாகக் குற்றம் சாட்டி வருகிறார்கள். எனவே, அதை அறிமுகப்படுத்துகின்ற வகையிலும் அதை விவசாயிகள் முழுமையாகப் பெற்று உணவு உற்பத்தித் திட்டம் போன்று பலவற்றைப் பெருக்குவதற்காக அந்த மாவட்ட மையத்தில் ஒரு விற்பனை நிலையத்தினைத் துவக்கினால் அது விவசாயப் பெருக்கத்திற்கும், விவசாயிகளுக்கும் நன்மையாக அமையும். எனவே, அதை அமைத்துத் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நான் புதுக்கோட்டை குடுமியான்மலையில் உள்ள அண்ணா பண்ணைக் குச் சென்றேன். அங்கே விவசாயிகளுடைய கருத்துக்களை அறிந்தபோது இப்படி ஒரு குற்றச்சாட்டை விவசாயிகள் என் னிடம் தந்தது இல்லை. அதுமட்டுமல்ல ஒவ்வொரு வேளாண்மை விற்பனை மையத்திலும் விவசாயிகளுக்குத் தேவை யான அனைத்து இடுபொருட்களும், பழக்கன்றுகளும் விதை

களும் வழங்கப்படவேண்டும் என்ற கருத்தை இந்த அரசு மையமாகக் கொண்டு பல்வேறு திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுமியான் மலையிலுள்ள அண்ணா பண்ணை கண்டுபிடிக்கப்படும் உயர் விளைச்சல் ரகங்களான விதைகள், பதியக் கன்றுகள், நெல், எண்ணெய் வித்துக்கள் போன்றவை விவசாயிகள் பயன்பெறும் வகையில் வாகனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் கிராமந்தோறும் சென்று விற்பனை செய்யப்படுமா? அப்படி இல்லாவிட்டால் தாலுக்காக்களின் தலைநகரங்களில் கிடைக்கும் வகையிலாவது அவைகள் விற்பனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையிலுள்ள பண்ணை புதிய விதைகள் கண்டுபிடிக்கக்கூடிய ஆராய்ச்சி மையமாக இல்லை. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சி மையங்கள் கண்டுபிடித்த புதிய ரகங்களைப் பெருக்குகின்ற விதைப் பண்ணையாகத்தான் அது செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள, அனைத்து ஒன்றியங்களிலுள்ள வேளாண்மை மையங்களில் அனைத்து விதைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 333.—டாக்டர் மு. சினியம்மாள். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

333—

புதுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள்.

*4258—டாக்டர் மு. சினியம்மாள்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம் புதுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசின் செயறகுறிப் பில் உள்ளதா ?